# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 43 / 2021 நாள்: 10.10.2021

**தமிழ்நாட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 9.10.2021 அன்று நடைபெற்ற 9 மாவட்டங்களுக்கான சாதாரண தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவில் பதிவான வாக்குகள் மற்றும் 28 மாவட்டங்களில் நடைபெற்ற தற்செயல் தேர்தலின்போது பதிவான வாக்குகளின் இறுதி நிலவரம்**

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட 35 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புளுக்கு சாதாரணத் தேர்தல்களுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவும், ஏனைய 28 மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் நிரப்பப்படாத மற்றும் காலியாக உள்ள பதவியிடங்களுக்கான தற்செயல் தேர்தலுக்கான வாக்குப்பதிவும் 09.10.2021 அன்று அமைதியான முறையில் நடைபெற்றது. இந்த வாக்குப்பதிவில் மேற்படி மாவட்டங்களில் கீழ்க்கண்டவாறு வாக்குகள் பதிவாகியுள்ளன.

| | |
|---|---|
| காஞ்சிபுரம் | .. 72.33 % |
| செங்கல்பட்டு | .. 75.51 % |
| வேலூர் | .. 81.07 % |
| இராணிப்பேட்டை | .. 82.52 % |
| திருப்பத்தூர் | .. 77.85 % |
| விழுப்புரம் | .. 85.31 % |
| கள்ளக்குறிச்சி | .. 82.59 % |
| திருநெல்வேலி | .. 69.34 % |
| தென்காசி | .. 73.35 % |
| மொத்தம் | .. 78.47 % |

..2..

28 மாவட்டங்களில் நடைபெற்ற தற்செயல் தேர்தல்களில் 70.51 % வாக்குகள் பதிவாகியுள்ளன.

தென்காசி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிவசைலம் கிராம ஊராட்சி, வார்டு எண் 3-க்கு நடைபெற்ற மறுவாக்குப்பதிவில் 80.79 % வாக்குகள் பதிவாகியுள்ளன.

9 மாவட்டங்களில் நடைபெற்ற இரண்டாம் கட்ட வாக்குப்பதிவின்போது காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பூந்தண்டலம் கிராம ஊராட்சி, வாக்குச்சாவடி எண்.173 (அனைத்து வாக்காளர்களுக்குமான வாக்குச்சாவடி)-க்கு ஒதுக்கப்பட்ட குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய வார்டு எண்.12-க்கான உறுப்பினர் தேர்தலுக்கான வாக்குச்சீட்டில் தவறாக சின்னம் பதிவாகி இருப்பது தெரிய வந்ததால் இந்த வாக்குச்சாவடியில் மட்டும் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய வார்டு எண்.12-க்கான உறுப்பினர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நிறுத்தி வைக்கப்பட்டு மறு வாக்குப்பதிவு நடத்த காஞ்சிபுரம் மாவட்ட தேர்தல் அலுவலர் அனுமதி கோரியதன் அடிப்படையில் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பூந்தண்டலம் கிராம ஊராட்சி, வாக்குச்சாவடி எண்.173-ல் மட்டும் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய வார்டு எண்.12-க்கான உறுப்பினர் தேர்தலுக்கான மறுவாக்குப்பதிவினை 11.10.2021 அன்று நடத்திட ஆணையத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், ஆலப்பாக்கம் கிராம ஊராட்சி, வார்டு எண் 1 மற்றும் 2-க்கென பொதுவாக அமைக்கப்பட்ட இருவார்டு வாக்குச்சாவடி எண்.32 (அனைத்து வாக்காளர்களுக்கான வாக்குச்சாவடி)-ல் 1வது வார்டுக்கான உறுப்பினர் பதவியிடம் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில் 2வது வார்டு உறுப்பினர் தேர்தலுக்காக வழங்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களை 1வது வார்டைச் சார்ந்த வாக்காளர்களுக்கும் வழங்கி வாக்களித்திருப்பது தெரிய வந்தால் செங்கல்பட்டு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், ஆலப்பாக்கம் கிராம ஊராட்சியின் 2வது வார்டு உறுப்பினர் தேர்தலை மட்டும் நிறுத்தி வைத்துவிட்டு மேற்படி பதவியிடத்திற்கு மட்டும் 11.10.2021 அன்று மறுவாக்குப்பதிவு நடத்த தேர்தல் நடத்தும் அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர், அச்சிறுப்பாக்கம் அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

10/10/2021

மக்கள் தொடர்பு அலுவலர்